## 12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

86. சேலம் மாவட்டத்திலுள்ள பெரியகல்ராயன் மேலநாடு -பெரியகல்ராயன் கீழநாடு இனும் எஸ்டேட்டுகள் நிலவரி ஏற்பாடு செய்வது குறித்த, வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 21-6-1978 ஆம் தேதியிடபெற்ற, 806ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு, தமிழ்நாடு இனும் எஸ்டேட்டுகள் (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73 (5) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.]

87. தமிழ்நாடு, 1970ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (பல்வகை விதித்துறைகள்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த, கூட்டுறவுத்துறையின் 1-7-1978 ஆம் தேதியிடப்பெற்ற 397ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1934ஆம் ஆண்டு கூட்டுறவு நில வளவங்கிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 38-ஏ 2பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS